**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC No**. 8287/2014

Date. 10.11.2025

பெயர்: ஆறுமுகம்

வழக்கு சாட்சி. பு.த.சா.1

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ஈரோடு காஞ்சிகோயில் காவல் நிலைய குற்ற எண் 99/2003 என்ற வழக்கில் புகார் தாரரான பாலசுப்ரமணியம் என்பவர் தன்னை ரமேஷ் பிரபு, கணேசன், ஜாகீர் மற்றும் பிரபு என்ற நான்கு நபர்கள் தன்னை ஈரோடு KAS லாட்ஜில் அறை எண்.215–ல் அடைத்து வைத்து மிரட்டி பத்திரங்களில் பூர்த்தி செய்யப்படாத பிராமிஸரி நோட்டுகளில் கையொப்பம் பெற்று மிரட்டி அனுப்பியது சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சம்பந்தமாக காஞ்சிக்கோயில் காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

2. மேற்படி புகார்தாரர் பாலசுப்ரமணியன் என்பவரை பின்னிட்டு மர்ம நபர்கள் வெட்டி கொலை செய்து விட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பவானியில் என் மீது அசல் வழக்கு 241/2007 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அந்த வழக்கு முடிந்து விட்டது. மேற்படி வழக்கில் என்னுடன் சேர்ந்து சில அரசியல்வாதிகளும் பிரதிவாதிகளாக உள்ளார்களா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

3. கடந்த 2000 வருடத்திலிருந்து 2014ஆம் வருடம் வரை நான் மொத்தம் எத்தனை மினி பேருந்துகள் வாங்கினேன் என்றால் 18 சிற்றுந்துகள், 2 பேருந்துகள் வாங்கினேன். 2014க்கு முநதைய வருமானவரி தாக்கல் செய்து விவரத்தையும், 2014க்கு பின்னிட்டு தாக்கல் செய்த வருமானவரி விவரத்தையும், இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. கடந்த 2000ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டுவரை நான் ஏதேனும் வங்கிக்கடன் பெற்றுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன் பின்னர் அதனை

செலுத்திவிட்டேன். 1990ம் ஆண்டு முதல் வருமானவரி தாக்கல் செய்து வருகிறேன் என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வருமானவரியின் விவரங்கள், சொத்து சம்பந்தமான விவரங்கள், செலவு சம்பந்தமான விவரங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(1ம் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2025.11.10 17:28:25 -0800

Judicial Magistrate No.III,

Erode.